

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், காரைக்குடி மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அழகப்பா மெட்ரிக் குலேசன் மேல்நிலைப்பள்ளியில், 4.10.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் குணசேகரன் , மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, காரைக்குடி மாநகராட்சி ஆணையர் சங்கரன் மற்றும் மருத்துவத் துறையை சார்ந்த அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.10.2025) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் உடல் நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் ராமதாஸ் அவர்களை சந்தித்து உடல்நலம் விசாரித்தார். உடன் குடும்பத்தினர், வழக்கறிஞர் ஆர்.சுதா எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி மற்றும் இரா.அருள் ஆகியோர் உள்ளனர்.

# சிதம்பரத்தில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர், அக். 9 -

கடலூர் கிழக்கு மாவட்டம், சிதம்பரம் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், சிதம்பரம், கார்த்திகேயன் திருமண மண்டபத்தில்,08.10.2025, காலை 11 மணியளவில் நடைபெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கழக சட்டத்திட்ட திருத்தக்குழு செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆலோசனை வழங்கினார்.

தலைமை கழக தொகுதி பார்வையாளர் பாரிபாலன், மாவட்ட பார்வையாளர் டி.பழனிசாமி, மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் சிதம்பரம் நகரம், பரங்கிப்பேட்டை வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு, குமராட்சி கிழக்கு மற்றும் மத்திய ஒன்றியம், அண்ணாமலை நகர் பேரூர், கிள்ளை பேரூர் கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அனைவரையும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தனித்தனியாக அழைத்து எவ்வாறு பணியாற்றுகிறார்கள் எனக் கேட்டறிந்தார்.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேசியதாவது;

வருகின்ற சட்டமன்ற தேர்தலில், சிதம்பரம் தொகுதியில் 60 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெற வேண்டும். அதற்கு கழக நிர்வாகிகள் கடினமாக உழைக்க வேண்டும்.நமது மண்டலத்தில் பி.எல்.சி., பி.எல்.ஏ.2 நிர்வாகிகள் தீவர களப்பணியாற்றி உழைக்க வேண்டும்.

ஒவ்வொரு பூத்திலும் மாற்றுக்கட்சியில் உள்ள தனது உறவினர்களை கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து கழகத்தில் இணைத்து வாக்குகளாக மாற்றிட வேண்டும். மேலும் மாற்றுக்கட்சியில் உள்ளவர்களை நேரிடையாக சந்தித்து, அவர்கள் எந்த கட்சியை சார்ந்தவர்கள் என விசாரித்து நமது கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றால் அவர்களை நமது கட்சியில் இணைப்பதற்கான வேலைகளை செய்திட வேண்டும். சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் கட்டுப்பாட்டுடன் செயல்பட்டு தேர்தல் பணியாற்ற வேண்டும், ஒன்றிய கழக செயலாளர்கள், பிஎல்ஏ2, கழக நிர்வாகிகள் சிறப்பாக செயல்படுகின்றனர், என்று தலைமை கழகம் பாராட்ட வேண்டும், அதற்கு தீவிர களப்பணியாற்ற வேண்டும். இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் முத்து.பெருமாள், ஆர். கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர்,ஆர்.ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர் பழனி, பொதுக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் விஜயராகவன், கே.பி.ஆர்.பாலமுருகன்,மஞ்சு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜாபர் அலி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு.சந்திரசேகரன், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு ஆர். பரந்தாமன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அப்பு.சத்தியநாராயணன், மாவட்ட நெசவாளர் அணி ப.நல்லதம்பி, மாவட்ட மகளிரணி தலைவர் லதா,சிதம்பரம் நகர துணை செயலாளர் வி.பி. பாலு,

உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பசுமலையில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் ஏற்பாட்டில் 2200 குடும்பத்தினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர் கிருஷ்ண பாண்டி, தொகுதி பொறுப்பாளர் சிவகாசி வனராஜா, வட்டச் செயலாளர் ஜெயராமன், ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன், இளைஞரணி காளிதாஸ், மகளிர் தொண்டர் அணி பிரமிளா பீமன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பயனாளிகள் பங்கேற்றனர்.

### தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க, சார்பில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

# பள்ளி மாணவ - மாணவியருக்கு 2500 தேர்வு வழி காட்டி புத்தகங்கள்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வழங்கினார்!

தென்காசி, அக். 9 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பத்தாம் வகுப்பு மாணவ, மாணவியர் களுக்கு பொது தேர்வு வழிகாட்டி 2500 புத்த கங்கள் (தேர்வில் வெல்வோம்) வழங்க முடிவு செய்யப்பட்டது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் கல்விக்கு கொடுத்து வரும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும்,தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குவதையும், அதனை மாணவர் மாணவியர்களுக்கு எடுத்துக் காட்டும் அடிப்படையிலும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டும் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஏற்பாட்டில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர் மாணவியர்கள் மீது அக்கறை கொண்டு,

அவர்களை ஊக்குவிக்கும் அடிப்படையில் பொதுத்தேர்வு வழிகாட்டி 2,500 புத்தகங்கள் அதாவது தேர்வில் வெல்வோம் வினாடி,வினா என்ற வாசகம் பொருந்திய புத்த கங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி (07.10.2025 ) அன்று தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.சங்கரன்கோவில் நகரில் உள்ள

கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் 175 மாணவர்களுக்கும்,அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் 384 மாணவியர் களுக்கும், 36 சேனைத் தலைவர் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவிகள் உட்பட 96 பேர்களுக்கும், வணிக வைசிய சங்கம் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவிகள் உட்பட 95 பேருக்கும் ஆக மொத்தம் 750,பேர்களுக்கு தேர்வில் வெல்வோம் என்ற புத்தகங்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் புனிதா, நகர செயலாளர் மு.பிரகாஷ், நகர்மன்ற தலைவர் கௌசல்யா வெங்கடேஷ், அணி அமைப் ப்பாளர் அப்பாஸ்,துணை அமைப்பாளர்கள் கார்த்திக்,சிவசங்கரன், முன்னாள் அமைப்பாளர் பத்மநாபன், வீரமணி,மாவட்ட பிரதிநிதி முத்துக்குமார், வார்டு செயலாளர் வீராச்சாமி, பழனிச்சாமி உள்பட கழகத்தினர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தெய்வ பிரியா,அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி கீதாவேணி,36 கிராம சேனை தலைவர் பள்ளி சுப்பிரமணியன், வணிக வைசிய சங்கம் பள்ளி முருகேசன் மாணவர்,மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த வினாடி வினா புத்தகங்கள் மாணவ,மாணவியர்கள் அதிகமாக தேர்வில் வெற்றி பெற மிகவும் உறுதுணையாக இருக்கும்.

தொடர்ந்து நேற்று (08.10.2025) தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. குருவி குளம் அரசு மேல்நிலைபள்ளி, செவல்குளம் அரசு பள்ளி,ஆலமநாயக்கன்பட்டி அரசு பள்ளி கலிங்கப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, திருவேங்கடம் அரசு பள்ளி, பெருங்கோட்டூர் அரசு பள்ளி, ஆகிய பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்,மாணவிகளுக்கு தேர்வு வழிகாட்டி புத்தகத்தை வழங்கினார்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,கே.குமரெட்டையாபுரம் கிராமத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு முகாமில் வழங்கப்படும் சேவைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும் மின்சாத் துறை சார்பில் பெயர் மாற்றம் மருத்துவத்துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் உள்ளிட்டவை வழங்கினார். நிகழ்வில் விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இம்மானுவேல் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கபடா ராஜி (கே. ராஜி)

### அக்டோபர் 9 (2008)



திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சிறந்த தொண்டராக விளங்கியதால், 'கருப்புச்சட்டை வீரர்' என்று கழகத்தினரால் அன்பாக அழைக்கப்பட்டவர். தி.மு.க. துவக்கப்பட்டபோது, இராயபுரம் பகுதி 6வது வட்ட அவைத்தலைவராகவும், மாவட்டக் கழக பிரதிநிதியாகவும் இருந்தவர்.

1963ஆம் ஆண்டு மீனவர்கள் கடலில் திசைமாறி காணாமல் போனபோது, ராணா என்ற நேவி கப்பலில் சென்று தேடி கண்டுபிடிக்க உதவியாக இருந்தவர்.

பழவேற்காடு முதல் மாமல்லபுரம் வரை மீனவர்களுக்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, மீனவர் பெடரேசன் தலைவராகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவசரநிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

'ராஜி' என்று அன்பொழுக தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

### கழக கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை

# மாநில துணைச்செயலாளர் வீரகணேசன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி - நேற்று இறுதிச் சடங்குகள் நடைபெற்றன!

மதுரை, அக். 9 –

கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணைச் செயலாளர் வீரகணேசன் அவர்கள் நேற்று முன்தினம் காலை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்ததும், கழகத்தினர் அன்னாரது இல்லம் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



தி.மு.கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் வீரகணேசன் அவர்கள் நேற்று முன்தினம் (07.10.2025) காலை 11.30 மணியளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

தற்போது மதுரை விராட்டிபத்து, பி.டி.ஆர். நகரில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்த ஏராளமான கழகத்தினர் அன்னாரது உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இறுதிச் சடங்கு நேற்று (8.10.2025) காலை விராட்டிபத்தில் உள்ள மயானத்தில் நடைபெற்றது.


## 12ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 18.09.1937

மறைவு 09.10.2013

# சேப்பாக்கம் க.சந்தான கிருஷ்ணன்

(22 ஆண்டுகள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் & 48 ஆண்டுகள் கிளை கழக செயலாளர்)

எங்கள் உயிரில் கலந்த உங்கள் நினைவுகளோடு...

தலைவர் தளபதி அவர்களின் வழியில் திராவிடத்தின் விழுதுகளாய்..

| மகன்கள் | மருமகள்கள் | மகள், மருமகன் | பெயரன்கள் | பெயர்த்திகள் |
|---|---|---|---|---|
| ச.அம்மையப்பன் | புவனேஸ்வரி அம்மையப்பன் | ச.ரதி க.ராஜசேகர் | கலாநிதி ராஜா அம்மையப்பன் | ஷாலினி |
| ச.ராஜேந்திரன் | புவனேஸ்வரி ராஜேந்திரன் | | நிரஞ்சன் ராஜசேகர் | ரோஷனி அஷ்வின் |
| ச.கலைச்செல்வன் | தனலட்சுமி கலைச்செல்வன் | | அஷ்வின் ராஜேந்திரன் | காவ்யா |
| ச.மதிவாணன் | சுதா மதிவாணன் | | ராகவ் ராதாகிருஷ்ணன் | அக்ஷயா |
| ச.கரிகாலன் | ஷர்மிளா கரிகாலன் | | | |



ராதா சந்தானகிருஷ்ணன் நினைவு அறக்கட்டளை, சென்னை